CENTRE FOR POLICY ALTERNATIVES
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

**ஊடக அறிவித்தல்**

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சுடனான உடன்பாட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல் தொடர்பானது**

திகதி : 2017 மார்ச் 09ஆம் திகதி வியாழனன்று, கொழும்பு தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் போது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், அமைச்சரவை அமைச்சுடன் ஏற்படுத்திக்கொண்ட முதலாவது புரிந்துணர்வு ஒப்பந்தம் இதுவாகும். இவ்வொப்பந்தமானது, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சுக்கிடையில் மார்ச் மாதம் 9ஆம் திகதி வியாழனன்று கைச்சாத்திடப்பட்டது. அமைச்சுக்களில் அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கம் தொடர்பாக மொழி ஆய்வொன்றை நடத்துவது பற்றி இப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

மொழிப் பிரச்சினையை தீர்ப்பது தொடர்பாக கிராம மட்டத்தில் செயற்பட்ட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் 2016 தொடக்கம் தேசிய மட்டத்தில் மொழிப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பிரவேசித்துள்ளது.

அரச கரும மொழிக் கொள்கையை பயனுள்ள வகையிலும் வினைத்திறனுடனும் அமுல்படுத்துவதற்கு அனைத்து அரச நிறுவனங்களிலும் பூரண ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளுதல் கட்டாயமானதாகும். அரச கரும மொழிக்கொள்கையை அமுல்படுத்தும் பொறுப்பை ஒப்படைத்தல். 2009 ஆம் ஆண்டு அரச நிருவாகச் சுற்றறிக்கை இல: 18 / 2009 மற்றும் 2009-11-25 இன் 1620/27 இலக்க வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் அரச நிறுவனங்களில் அரச கரும மொழிக் கொள்கை அமுலாக்கம் குறித்து சட்ட ரீதியான ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அதனடிப்படையில் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் மூலம் அரச நிறுவனங்களின் மொழித் திட்டத்தை தயாரிப்பதற்கான வழிகாட்டல் கைநூல் தயாரிக்கப்பட்டதுடன் அதன் மூலம் அரச நிறுவனங்களில் மொழித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் வழிகாட்டுதல் வசதிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களும் அதற்குச் சமாந்திரமாக இடம்பெற்றன. குறித்த வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு அரச கரும மொழிக்கொள்கையை அமுலாக்குவதற்கான 4 பிரதான துறைகள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டது. அதாவது, அரச கரும மொழிக்கொள்கை அமுலாக்கத்தை வெளிப்படுத்துதல், நிருவாகம் மற்றும் ஆவணப்படுத்தல், சேவை வழங்குதல் மற்றும் நிறுவன அரப்பணிப்பு மற்றும் பொறிமுறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது.

அமைச்சு மட்டத்தில் அரச கரும மொழிக்கொள்கை அமுலாக்கும் செயற்பாடுகளை துரிதப்படுத்துதல் மற்றும் பயனுறுதி தொடர்பாக மதிப்பீடொன்றை நடத்துவதன் மூலம் குறிப்பிட்ட நிறுவனத்தின் தற்போதைய நிலை பற்றிய விளக்கத்தைப் பெறுதல் காலத்தின் தேவையாக உள்ளது. அதற்கு அமைவாக அமைச்சுக்களில் அரச கரும மொழிக்கொள்கை அமுலாக்கம் மதிப்பீடு தொடர்பான ஆய்வை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.